# கீழக்கரை நகர்மன்ற 30.06.2021–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள் :1**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளிலும் 1270 எண்ணம் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு, அவை இந்நகர் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன. இந்தப் பணிகளை செய்வதற்கு இந்நகராட்சிக்கு ஒரே ஒரு மின் பணியாளர் மற்றும் ஒரு மின்பணி உதவியாளர் பணியிடங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீரேற்றம் நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்களையும், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 3 எண்ணம் கழிவு நீரேற்றும் நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டர்கள்/ ஆயில் என்ஜின்களை நல்ல முறையில் பராமரிப்பு பணிகளும் செய்ய வேண்டியுள்ளது. இப்பணி செய்வதற்கு இந்நகராட்சியில் பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படவில்லை. ஆகையால் இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணியாளர்களைக் கொண்டு குடிநீர் மின்மோட்டார்கள் மற்றும் கழிவுநீர் மின்மோட்டார்கள் / ஆயில் என்ஜின்களை பராமரிப்பு பணிகள் பார்த்து வரப்படுகிறது. ஆகவே, இப்பணிகளை கூடுதலாக ஒரு நபரைக் கொண்டு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

இந்நகராட்சி நிர்வாக நலனை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணிகளான தெரு விளக்கு பராமரிப்பு, குடிநீர் மின்மோட்டார் மற்றும் கழிவு நீர் மின்மோட்டர்கள்/ ஆயில் என்ஜின்களை பராமரிப்பு பணிகள் ஒரு நபரைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.02.2021 முதல் 31.07.2021–ந் தேதி வரை பணி செய்வதற்கு 31.12.2020 மற்றும் 29.01.2021–ந் தேதிய இந்நகர்மன்ற அனுமதியின்படி, தற்போது பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பணிகள் தொய்வின்றி தொடர்ந்து நடைபெறுவதற்கு ஏதுவாக ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு 2020–21 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விலை விகித அட்டவணை வரிசை எண்.100 Electrical Helper for Maintenance of Street Light பணிக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கு ரூ.497/– வீதம் இந்நகராட்சி தெரு விளக்குகள் பராமரிப்பு பணிகளை ஒரு நபரைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) பணி அமர்த்திக்கொள்ள 01.08.2021 முதல் 31.01.2022 வரை ஆறு மாதங்களுக்கு நிர்வாக செலவினம் 12 சதவீதம் உட்பட ரூ.1,01,000/–க்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இந்நகராட்சி நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டுள்ளது. அதன்படி, தெருவிளக்குகளின் பராமரிப்பு பணிகள் ஒரு நபரைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.08.2021 முதல் 31.01.2022 வரை ஆறு மாதங்களுக்கு மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செய்யவும் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.361/2021/இ1)

அலுவலக குறிப்பு

1) இந்நகராட்சி நிர்வாக நலனை கருத்தில் கொண்டு தெரு விளக்கு பராமரிப்பு பணிகள் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) பணி செய்ய ஆறு மாதங்களுக்கு ஒரு நபர் வழங்குவதற்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ.1,01,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் பணிக்குரிய செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.872.அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :2</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் உள்ள பொது மக்கள் தினசரி பயன்படுத்தும் வீட்டு கழிவுநீர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 புதிய பேருந்து நிலைய பின்புறம் உள்ள மாட்டுக் கொட்டகை, வார்டு எண்.16 புதுக்குடி மற்றும் வார்டு எண்.21 தட்டான்தோப்பு ஆகிய மூன்று இடங்களில் சேகரிக்கப்பட்டு மோட்டார்கள் மூலம் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேற்படி கழிவு நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் என்ஜின்களை இயக்குவதற்கும், மேலும் அப்பகுதியில் அமைந்துள்ள கழிவு நீர் தொட்டிகளைப் பராமரிப்பதற்கும் இந்நகராட்சிக்கு பணியிடங்கள் ஏதும் அனுமதிக்கப்படவில்லை. இந்நகராட்சி மூன்று கழிவு நீரேற்றும் நிலையத்திற்கு இரவு மற்றும் பகல் பணிக்கு இருவர் வீதம் ஆறு நபர்களைக் கொண்டு பணி மேற்கொள்ள வேண்டிய அவசியமாகிறது.

இந்நகராட்சி பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு மேற்படி கழிவு நீர் ஏற்ற நிலையத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் என்ஜின்களை இயக்குவதற்கும், மேலும், அப்பகுதியில் அமைந்துள்ள கழிவுநீர் தொட்டிகளை பராமரிக்கும் பணிகளை ஆறு நபர்களை கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.02.2021 முதல் 31.07.2021–ந் தேதி வரை பணி செய்வதற்கு 31.12.2020 மற்றும் 29.01.2021–ந் தேதிய இந்நகர்மன்ற அனுமதியின்படி, தற்போது பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பணிகள் தொய்வின்றி தொடர்ந்து நடைபெறுவதற்கு ஏதுவாக ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு 2020–21 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விலை விகித அட்டவணை வரிசை எண்.8(b) Pump operator without ITI பணிக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கு ரூ520/– வீதம் கழிவு நீரேற்று நிலையத்திற்கு ஆறு நபர்களை கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) பணி அமர்த்திக்கொள்ள 01.08.2021 முதல் 31.01.2022 வரை ஆறு மாதங்களுக்கு நிர்வாக செலவினம் 12 சதவீதம் உட்பட ரூ.6,30,000/–க்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதற்கான செலவினத்தை இந்நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி மூன்று கழிவு நீர் ஏற்ற நிலையத்திற்கு இரவு மற்றும் பகல் பணிக்கு இருவர் வீதம் ஆறு நபர்களைக் கொண்டு ஒப்பந்த ஒப்பந்த அடிப்படையில் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.08.2021 முதல் 31.01.2022 வரை பணிகள் மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.362/2021/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

1) பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு இந்நகராட்சி ஒரு கழிவு நீரேற்று நிலையத்திற்கு இரவு மற்றும் பகல் பணிக்கு இருவர் வீதம் 3 கழிவு நீரேற்று நிலையத்திற்கும் ஆறு நபர்களை வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) ஆறு மாதங்களுக்கு பணி செய்ய இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ.6,30,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் பணிக்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.873 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :3</u>**

கீழக்கரை நகராட்சிப் பொது மக்களுக்கு மாலாங்குண்டு,சேதுக்கரை குடிநீர் ஏற்றும் நிலையங்கள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் பெறப்படும் குடிநீர் இந்நகர் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படும் பொழுது குடிநீர் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு, குடிநீர் வீணாக சாலையில் வெளியேறுகிறது. அதனை உடனடியாக பழுதுநீக்கப் பணிகள் செய்ய வேண்டியுள்ளது. ஆனால், இந்நகராட்சிக்கு ஒரே ஒரு குடிநீர் குழாய் பொருத்துநர் பணியிடம், ஒரு மோட்டார் இயக்குபவர் பணியிடம் மற்றும் இரண்டு குடிநீர் மேல்நிலைத் தொட்டி காவலர் பணியிடங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. பணியாளர்கள் பற்றாக்குறையால் குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீர் குழாய் பழுது நீக்கப் பணிகள் செய்வதில் காலதாமதம் ஏற்படுவதுடன் பொது மக்களிடம் இருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. அதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு இரண்டு நபர்கள் பணி அமர்த்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

இந்நகராட்சி குடிநீர் திட்டப் பணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்காணும் குடிநீர் திட்டப் பராமரிப்பு பணிகளை இரண்டு நபர்களை கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.02.2021 முதல் 31.07.2021–ந் தேதி வரை பணி செய்வதற்கு 31.12.2020 மற்றும் 29.01.2021–ந் தேதிய இந்நகர்மன்ற அனுமதியின்படி, தற்போது பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி நிர்வாக நலனைக் கருத்தில் கொண்டு, சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீர் ஏற்று நிலையங்கள் பராமரிப்பு மற்றும் குடிநீர் குழாய்கள் பராமரிப்பு பணிகள் தொய்வின்றி தொடர்ந்து நடைபெறும் பொருட்டு இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக 2020–21 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விலை விகித அட்டவணை வரிசை எண்.8(b) Pump operator without ITI பணிக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கு ரூ.520/– வீதம் இரண்டு நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முறைப்படி (Out sourcing) 01.08.2021 முதல் 31.01.2022 வரை ஆறு மாதங்களுக்கு நிர்வாக செலவினம் 12 சதவீதம் உட்பட ரூ2,10,000/–க்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இந்நகராட்சி நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீர் ஏற்று நிலையங்களில் பராமரிப்பு பணிகள் மற்றும் குடிநீர் குழாய் பராமரிப்பு பணிகள் இரண்டு நபர்களைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.08.2021 முதல் 31.01.2022 வரை ஆறு மாதங்களுக்கு பணி மேற்கொள்வதற்கும், அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செய்வதற்கும் நகர்மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.363/2021/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

1) குடிநீர் திட்டப்பணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) பணி செய்ய ஆறு மாதங்களுக்கு இரண்டு நபர்களை வழங்குவதற்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ.2,10,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிக்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.874அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள் :4**

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவு மற்றும் பொதுசுாதார பிரிவுகளில் மின்விளக்குகள் எரியாமல் பழுதான நிலையில் உள்ளதால் அலுவலகப் பணிகள் மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுவதால் ஆணையாளர் அவர்களின் நேரடி அறிவுரையின் அடிப்படையில், எரியாமல் உள்ள மின்விளக்குகளை மாற்றி புதிய மின்விளக்குகள் பொருத்துவதற்கு 9 W LED குண்டு பல்ப்–12 எண்ணம் தேவைப்படுவதால், அவற்றை வாங்கித் தருமாறு இவ்வலுவலக மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது.

அதன்படி, இந்நகராட்சி பொறியாளர் அறிக்கை மற்றும் ஆணையாளரின் 14.06.2021–ந் தேதிய உத்தரவின்படி, இந்நகராட்சி அலுவலகத்திற்கு எரியாமல் உள்ள மின்விளக்குகளை மாற்றி புதிதாக 9 W LED குண்டு பல்ப் –12 எண்ணம் மின்விளக்குகள் வாங்கி பொருத்துவதற்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,300/– ஆகும் என இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.297/2021/இ1)**

**அலுவலகக்குறிப்பு**

1. நிர்வாக நலனை கருத்தில் கொண்டு இந்நகராட்சி அலுவலகத்திற்கு 9 W LED குண்டு பல்ப் –12 எண்ணம் மின்விளக்குகள் புதிதாக வாங்கி பொருத்துவதற்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ரூ.1,300/–ஐ செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.875 அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :5</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட 21வது வார்டு சி.எஸ்.ஐ சர்ச் பின்புறம், தட்டான்தோப்பு செல்லும் வழியில் போர்மோட்டார் பழுதடைந்துள்ளதால், பொதுமக்கள் தண்ணீர் உபயோகத்திற்கு மிகவும் சிரமப்படுவதாகவும், அதனை பழுதுநீக்கம் செய்து தருமாறு அப்பகுதி பொதுமக்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, இந்நகராட்சிப் பொறியாளரின் குறிப்பின்படி 21வது வார்டு தட்டான்தோப்பு தெருவில் அமைந்துள்ள 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மினிவிசை பம்ப் 1 HP மின்மோட்டார் காயில் பழுதாகி காப்பர் புஸ் தேய்மானம் ஆன நிலையில் உள்ளதால் மின்மோட்டாரை இயக்க முடியாத நிலையில் உள்ளதால் அவற்றை பழுது நீக்கம் செய்து தருமாறு இவ்வலுவலக மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, அப்பகுதி பொதுமக்களின் தண்ணீர் அவசிய தேவையினை கருத்தில் கொண்டு மேற்காணும் 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மினிவிசை பம்ப் 1 HP மின்மோட்டார் பழுதுநீக்கம் செய்ய உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4,500/— ஆகும் என இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.298/2021/இ1)**

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. 21—வது வார்டு பொதுமக்களின் தண்ணீர் அவசிய தேவையினை கருத்தில் கொண்டு தட்டான்தோப்பு தெருவில் அமைந்துள்ள மினிவிசை பம்ப் 1 HP மின்மோட்டார் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து ரூ.4,500/—ஐ மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.876 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :6</u>**

கீழக்கரை நகராட்சி 21–வது வார்டு தட்டாந்தோப்பு கழிவுநீரேற்றும் நிலையத்தில் உள்ள மின்மோட்டார்களை மின்தடை நேரங்களில் இயக்குவதற்கு 15 K.V.A ஜெனரேட்டர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஜெனரேட்டரில் உள்ள மின்கலன் பழுதான நிலையில் உள்ளதால் மின்தடை நேரங்களில் கழிவுநீர் வெளியேற்றும் பணியில் சிரமம் ஏற்படுவதாகவும் பழுதான பழைய மின்கலனை (Battery) மாற்றி புதிதாக 12V மின்கலன் (Battery) வாங்கித் தருமாறு இவ்வலுவலக மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது.

அதன்படி, இந்நகராட்சி பொறியாளர் அறிக்கை மற்றும் ஆணையாளரின் உத்தரவின்படி, மேற்காணும் தட்டாந்தோப்பு கழிவுநீரேற்றும் நிலையத்தில் 15 K.V.A ஜெனரேட்டருக்கு புதிதாக 12V மின்கலன் (Battery) வாங்கிப் பொருத்துவதற்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.11,000/–ஆகும் என இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.300/2021/இ1)**

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு தட்டாந்தோப்பு கழிவுநீரேற்றும் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 15 K.V.A ஜெனரேட்டருக்கு புதிதாக 12V மின்கலன் (Battery) வாங்கிப் பொருத்துவதற்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து ரூ.11,000/–ஐ செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.877 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/–எம். பூபதி,**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**